## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW-1 – OS. No.61/2025**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பெஞ்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.சரசு (எ) சரஸ்வதி | தொழில் : |
| த/பெ. : திரு.ராமசாமி | வயது : 44 |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 07.07.1983 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | **வாசாஆ-1** |
| 2 | 01.08.2022 | ஆச்சியம்மாள் இறப்பு சான்றிதழ் | சான்றிட்டநகல் | **வாசாஆ-2** |
| 3 | 06.09.2024 | ஆச்சியம்மாள் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் | **வாசாஆ-3** |
| 4 | 16.08.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | **வாசாஆ-4** |
| 5 | | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வாசாஆ-5** |
| 6 | | அரசு சந்தை வழிகாட்டி மதிப்பு | நகல் | **வாசாஆ-6** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.